குழந்தைகளின் வளரச்சிக்கு ஏற்ப ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர்களின் கற்றுக்கொள்ளும் முறை மாறுபடுகிறது. அதற்கேற்ப கற்பித்தல் முறையை மாற்றியமைக்க வேண்டும்.

குழந்தைகள், தங்களைச் சுற்றி நடப்பவற்றை உற்று நோக்கியும் பெரியவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே செய்வதன் மூலமும் கற்றுக்கொள்கிறார்கள். முதல் சில ஆண்டுகளில் தன்னைச் சுற்றி உள்ளவற்றை, நடப்பவற்றை உற்று நோக்குவதன் மூலம் குழந்தை கற்றுக்கொள்கிறது.

உடல் வளர்ச்சிக்கு முக்கிய காலக்கட்டம்

இயல்பாகவே குழந்தைகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டும் எதையாவது செய்து கொண்டும் இருப்பவர்கள். நான்கு அல்லது ஐந்து வயது குழந்தை, மணிக்கணக்கில் ஒரு மேசையில் அமர்ந்து ஏதேனும் ஒன்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமானதல்ல. இதனைக் விளையாட்டுவழி, செயல்வழி, தொட்டுணர், செயல்பாடுகள், பாடங்கள் கற்றுத் தரப்பட வேண்டும்.

"நீங்கள் கற்பிக்கும் முறை வாயிலாக குழந்தைகள் கற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், குழந்தைகள் கற்றுக்கொள்ளும் வகையில் நீங்கள் கற்பிக்க வேண்டும்." என்றார் இக்னேசியா எக்ஸ்ட்ரடா இதனடிப்படையிலேயே கற்பித்தல் நிகழவேண்டும்.

மன அழுத்தமோ பயமோ இல்லாமல் மகிழ்ச்சியான முறையில் கற்றுக்கொண்டால்தான் குழந்தைக்கு எளிதில் பாடங்கள் புரியும்.

நமது கல்விமுறை முழுமையும் ஒரு பெரிய மாற்றத்திற்கு உள்ளாகவேண்டும். அதாவது, போட்டியின் அடிப்படையில் அல்லாமல், குழந்தைகளின் வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில், அனுபவித்துக் கற்றுக்கொள்வதாக மாற வேண்டும். கற்றுக்கொண்டவை அனைத்தும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க வேண்டும் என்பதே இந்தத் தேவையின் அடிப்படையிலேயே வரும் கல்வியாண்டில் 1-3 வகுப்புகளுக்கான 'எண்ணும் எழுத்தும்' திட்டம் வடிவமைக்கப்பட்டு நடைமுறைக்கு வருகிறது.

வரும் 2022-23 கல்வியாண்டில் தொடங்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் இலக்கு 2025-ல் 8 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் எழுத்தறிவும் எண்ணறிவும் கிடைத்துவிட வேண்டும் என்பது. அதற்கேற்ற வகையில் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளின் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். செயல்வழியிலும் விளையாட்டு வழியிலும் குழந்தைகள் கற்றாலும், அவர்களின் கற்கும் திறனை வைத்து அவர்களை குழுக்களாகப் பிரித்து பாடங்களை கற்றுத் தருவதே இத்திட்டத்தின் அடிப்படை.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 1 லட்சத்தை எட்டுகிறது

புதுடெல்லி, ஜூன் 29-

இந்தியாவில் புதிதாக 14 ஆயிரத்து 506 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு தொடர்பான விவரத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று காலை வெளியிட்டது.

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 14 ஆயிரத்து 506 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது நேற்றைய பாதிப்பான 11 ஆயிரத்து 793ஐ விட அதிகமாகும். நாட்டில் இதுவரை 4 கோடியே 34 லட்சத்து 33 ஆயிரத்து 345 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பில் இருந்து 11 ஆயிரத்து 574 பேர் குணமடைந்துள்ளனர். கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 28 லட்சத்து 8 ஆயிரத்து 666 ஆக அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 99 ஆயிரத்து 602 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில் 30 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை 5 லட்சத்து 25 ஆயிரத்து 77 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாடு முழுவதும் இதுவரை 197 கோடியே 46 லட்சத்து 57 ஆயிரத்து 138 தடுப்பூசி டோஸ்கள் மக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 55 கோடியே 5 லட்சத்து 77 ஆயிரத்து 406 ஆக அதிகரித்துள்ளது. தொற்று பாதிக்கப்பட்டவர்களில் 1 கோடியே 87 லட்சத்து 56 ஆயிரத்து 796 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 52 கோடியே 62 லட்சத்து 46 ஆயிரத்து 203 பேர் குணமடைந்துள்ளனர். உலகம் முழுவதும் இதுவரை 63 லட்சத்து 53 ஆயிரத்து 574 பேர் உயிரிழந்து உள்ளனர்.

கொரோனா அதிகம் பாதித்த நாடுகளின் வரிசையில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. அந்நாட்டில் இதுவரை 8.90 கோடி பேருக்கு பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து இந்தியா மற்றும் பிரேசில் ஆகியவை அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

விற்பனை அறிவிப்பு

சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)

CIN: L21012TN2005PLC092783

பதிவு அலுவலகம் : கொடுகநல்லூர் கிராமம், வடுகன்பட்டி அஞ்சல், உ.சி.பேட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு - 627010.

மின்னணு ஏலம்

நிறுவன கடன்தாரரின் சொத்துக்களை (Going Concern ஆக) விற்பதற்கு நாளதுக்குள் மற்றும் தேசிய சட்டத் தீர்ப்பாய 2016-ன் கீழ் மாண்புமிகு தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாய (NCLT), சென்னை வழக்கு 26.11.2021 மற்றும் 02.06.2022 தேதியிட்ட ஆணையின்படி விற்பதற்கான அறிவிப்பு

IBBI கட்டுபாடுகள் 2016 (நலைத்தல் நடைமுறை) விதிமுறை 32(e)-ன் கீழ் M/s. சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட் (கலைப்பில் உள்ளது) (நிறுவன கடன்தாரர்) சொத்துக்களை விற்பனை செய்வதற்கான ஏல அழைப்பு என்னவென்றால் "யது எங்கு அல்லது எப்படி உள்ளதோ, அதை அப்படியே" என்ற முறையில் அச்சொத்துக்களின் ஏல விற்பனை நடத்தப்படும். இது மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் 24.04.2018 தேதியிட்ட ஆணையைப் நியமிக்கப்பட்ட கலைப்பாளரால் நடத்தப்படும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள், முழுமையான மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் உள்ள ஏலம் தொடர்பான விதிமுறை விவரங்கள், ஏல படிவம், தகுதி வரம்பு, ஒதுக்கீடுகளின் அறிவிப்பு உள்ளிடவற்றை பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் தீருப்பிலும் வடிவில்லை Participation Deposit மற்றும் வடிவில்லை டேவணித் தொகை பேன்றவைகளின் விவரங்களை நிறுவன கடனாளின் இணையதளம் www.servalakshmi.co.in மற்றும் சேவை வழங்குநர் இணையதளத்தில் பார்க்கவும். மின்னணு ஏல விற்பனை **www.ncltauction.auctiontiger.net** இணையதளம் மூலம் கூறப்பட்ட மின்னணு ஏல செயல்முறை ஆவணத்திற்கு உட்பட்டு விற்பனை நடத்தப்படும். பொருத்தக்கூடிய இணைப்பு மற்றும் பிற வரிகள் கூடுதலாக செலுத்த வேண்டும்.

சொத்து	பார்வையிடும் நாள்	மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம்	அடிப்படை விலை (INR)	டேவணித் தொகை & கூடுதல் தேதி (INR)	ஏல அதிகரிப்பு தொகை (INR)
கொடுகநல்லூர் கிராமம், வடுகன்பட்டி அஞ்சல், உ.சி. பேட்டை, திருநெல்வேலி 627010-ல் அமைந்துள்ள தொழிற்சாலை வளாகத்தில் உள்ள நிலம் (தோராயமாக 349 ஏக்கர்) மற்றும் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்	29/06/2022 முதல் 13/07/2022 வரை நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை	15/07/2022 மாலை 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை	ரூ.121.00 கோடி (ஒரு நூற்று இருபத்து ஒன்று கோடி மட்டும்)	ரூ.12.00 கோடி (ஒரு பன்னிரண்டு கோடி மட்டும்) கூடுதல் தேதி 13/07/2022	ரூ.50.00 லட்சம் (ஒரு ஐம்பது லட்சம் மட்டும்)

விற்பனை அறிவிப்பு மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்துடன் இணைந்து படிக்கவும். மின்னணு ஏலம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள திரு. பிரவீன் தேவர். +91-9722778828. மின்னஞ்சல்: Praveen.thevar@auctiontiger.net அல்லது ncltt@auctiontiger.net-ல் தொடர்பு கொள்ளலாம். விற்பனை தொடர்பான மேலும் விவரங்களை அறிந்து கொள்ள கீழ்க்கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளலாம் அல்லது csdhanapal.ibc@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். காலக்கெடு, நிபந்தனைகள், விதிமுறைகள் மற்றும் மின் ஏல செயல்முறை ஆவணத்தில் உள்ள இதர சரத்துகளில் உள்ள மற்றுமுள்ள நிறுவன கடன்தாரரின் இணையதளத்தில் www.servalakshmi.co.in-ல் அறிவிக்கப்படும்.

S. தனபால்

தேதி : 29.06.2022

இடம் : சென்னை

சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்டுக்கான (கலைப்பில் உள்ளது) கலைப்பாளர்

Reg No- IBBI/IPA-002/IP-N00060/2017- 18/10112

அறை எண்.103, காவேரி காம்ப்ளக்ஸ், 96/104, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி : 044-4553 0256 / 0257, மின்னஞ்சல் : csdhanapal.ibc@gmail.com